# வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்

தரம் 6

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

## தமிழ்மொழியும் இலக்கியமும்

சுட்டெண் -

நேரம் 2.00 மணித்தியாலங்கள்

## பகுதி - I

*** மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. அரசன் கோபம் கொண்டு தண்டனை வழங்கினான் "கோபம்" என்பதன் ஒத்த சொல்
   1. ஆசை  2. சினம்  3. மகிழ்ச்சி  4. கவலை

2. "வெய்யிற் கொடுமையம்மா! மேனி வியர்க்குதம்மா!" மேனி என்பதன் ஒத்த சொல்
   1. மனிதன்  2. உடம்பு  3. தலை  4. கால்

3. மக்கள் நீதி கேட்டு அரசிடம் சென்றனர், நீதி என்பதன் எதிர்ச்சொல்
   1. அநீதி  2. சாந்தம்  3. நிராசை  4. நிர்க்கதி

4. உணர்ச்சிக்குறி என அழைக்கப்படுவது
   1. காற்புள்ளி  2. வினாக்குறி  3. வியப்புக்குறி  4. முற்றுப்புள்ளி

5. ங், ஞ், ண், ந், ம், ன் என்பது
   1. வல்லினமெய்  2. மெல்லினமெய்  3. இடையினமெய்  4. உயிர் எழுத்துக்கள்

6. உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
   1. 12  2. 18  3. 216  4. 30

7. அதிபர் மேடையில் பேசினார் என்பது
   1. தனிவாக்கியம்  2. கூட்டுவாக்கியம்  3. கலப்பு வாக்கியம்  4. மெய்ப்பாட்டு வாக்கியம்

8. ரவி மரத்தை வெட்டினான். இங்கு மரத்தை என்பது
   1. எழுவாய்  2. பயனிலை  3. செயப்படுபொருள்  4. அடைமொழி

9. "நீ நேற்றுப் பாடசாலைக்கு வந்தாயா?" நீ என்பது
   1. தன்மை  2. முன்னிலை  3. படர்க்கை  4. இடப்பெயர்

10. வெள்ளைப் பூனை பாலை மெல்லக் குடித்தது. இங்கு வந்துள்ள பயனிலை அடைமொழி
    1. வெள்ளை  2. பால்  3. மெல்ல  4. குடித்தது

11. மேசையில் இருந்து விழுந்த தவலை உடைந்தது. தவலை என்பது
    1. சட்டி  2. குடம்  3. பானை  4. கோப்பை



kalvi.lk

12. ஆத்தி மலர் மாலையை அணிந்தவர் யார்?
1. பிள்ளையார் 2. முருகன் 3. சிவன் 4. அம்மன்

13. ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா
1. பொன்விழா 2. வெள்ளிவிழா 3. பவளவிழா 4. வைரவிழா

14. புதிய ஆத்திசூடியை இயற்றியவர்
1. பாரதிதாசன் 2. பாரதியார் 3. ஔவையார் 4. விபுலானந்தர்

15. புவியீர்ப்புக் கொள்கையைக் கண்டறிந்தவர் யார்?
1. சேர். ஐசாக் நியூற்றன் 2. அரிஸ்டோட்டல்
3. டார்வின் 4. மார்க்கோனி

16. ஓடி ஓடி என்பது
1. அடுக்குத்தொடர் 2. அடுக்கிடுக்குத் தொடர்
3. இணைமொழி 4. இரட்டைக்கிளவி

17. வாழையின் இளையது குட்டி என்பது போல பனையின் இளையது
1. பிள்ளை 2. குட்டி 3. வடலி 4. கன்று

18. குரங்கினது ஆண் கடுவன் என்பது போல பெண்
1. மந்தி 2. பிணா 3. பறள் 4. குறுளை

19. பனையினது இலை, ஓலை என்பது போல நெல்லினது இலை
1. ஓலை 2. தாள் 3. கீற்று 4. இலை

20. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதன் கருத்து
1. சந்தர்ப்பம் கிடைக்கும் போது பயன்படுத்துதல்
2. காற்று வரும் போது தூற்றுதல்
3. காற்று வரும் போது மகிழ்ச்சியாக இருத்தல்
4. காற்றுள்ள போதே காயவிடுதல்

(2 X 20 = 40 புள்ளிகள்)

# பகுதி - II

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. கிழிந்த புத்தகத்தின் சுயசரிதை
2. சூழலைப் பேணுவோம்
3. நான் விரும்பும் பெரியார்
4. காலைக்காட்சி

(20 புள்ளிகள்)

02. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

1. அழகு
2. அளகு
3. உழவு
4. உளவு
5. ஆழி
6. ஆளி
7. குழவி
8. குளவி
9. அரி
10. அறி

(10 புள்ளிகள்)

03. பின்வரும் சொற்களின் திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றைக் கூறுக.

1. அவர்கள்
2. வந்தான்
3. அரசி
4. பசு
5. விளையாடுகின்றார்கள்

(10 புள்ளிகள்)

04. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. பாண்டிமாதேவி கண்ட கனவு யாது?
2. செய்திகளைத் தெரிவிக்கும் ஊடகங்கள் எவை?
3. செய்ந்நன்றி மறந்தவரின் நிலை யாது?
4. நியூற்றன் எங்கே வாழ்ந்தார்?
5. தென்னை மரத்தின் பயன்கள் யாவை?

(20 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

கட்டண விபரங்கள்

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

JOIN NOW

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457